
லயன்
காமிக்ஸ்
மரண
நடை!
ரூ. 10-



# ஹாட் - லைன்

வாசக நண்பர்களே,

வணக்கம். டெக்ஸ் வில்லர் குழுவின் ஒரு 'மினி' சாகஸம் இந்த மாதம் உங்களுக்காக காத்துள்ளது! மே மாதம் வரவிருக்கும் 'வில்லர் விருந்து'க்கு இது ஒரு appetiser மாதிரி! படித்து விட்டு விமர்சனங்களை அனுப்பிட வேண்டுகிறேன்!

சென்ற மாத வெளியீடான **'ஹாலிவுட்டில் ஜாலி''**க்கு இந்தப் பகுதியை எழுதும் தேதி வரை (7/2/97) விமர்சனங்கள் வரவில்லை! So - அது பற்றி அடுத்த மாதம்!

அடுத்த வெளியீடாக டிடெக்டிவ் சார்லஸ் துப்பறியும் **''கடலோரக் கொலைகள்''** எனும் திகில் த்ரில்லர் வருகிறது! கூடவே ஒரு குட்டி ரிப் கிர்பி கதையும் கூட! So - don't miss it!

இந்த மாதம் முதல் 2 புதிய பகுதிகள் தொடங்குகின்றன!

முதலாவது - நான் எழுதும் முதல் புதிய தொடர்! (மீண்டும் பிளேடு?) இரண்டாவது - ''மீண்டும் புக்-மார்கெட்''

மே மாதம் வரவிருக்கும் **''கோடை மலர்''** முன்பதிவுக் கூப்பனும் பின்பகுதியில் உள்ளது. பயன்படுத்திக் கொள்ளலாமே?!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை have fun!



அன்புடன்,

**S. விஜயன்.**


முத்து காமிக்ஸ் இதழ் நிர் : 250!
ஏப்ரல் '97ல் வருகிறது!
முத்து காமிக்ஸ்
கேப்டன் டைகர் தோன்றும்
இரும்புக் கை எத்தன்!
+
ஒரு "சஸ்பென்ஸ்" இலவச இணைப்பு!
ரூ. 7/=


மரண நடை!
தெற்கு உடா பகுதியிலுள்ள பெரிய நகரமான மாண்டி செல்லோவில் -
ஏற்பாடெல்லாம் ரெடியா?
உங்களுடைய உத்தரவுக்காகத்தான் அனைவரும்
காத்துக் கொண்டிருக்கிறார்கள் மிஸ்டர் பர்ரோ...
விதண்டா வாதம் பேசும் மார்ட்டி கூடவா?
அவனும்தான்!
இப்பிராந்திய செவ்விந்திய ஏஜெண்டிடமிருந்து வேட்டை பெர்மிட் ஒன்று வாங்கியிருக்கிறீர்கள் என்று நான் சொன்னது தான் தாமதம் குதிரையில் சேணத்தை ஓட்டத் தயாராகிவிட்டான்
G.BARROW STORE
ம்ம்... நல்ல சகுனம்!
SALOON
OFFICE
STORE
இந்தா... போய் ரெமோவில் இஷ்டம் போல் அனுபவி...! பிறகு மற்றவர்களிடம் போய்ச் சொல் - அடுத்த இரண்டு மணி நேரத்தில் நாம் புறப்படுகிறோம் என்று!
நன்றி!


2 மணி நேரம் கழித்து ஆயுதம் தாங்கிய இருபது வீரர்கள் முன்னே செல்ல நான்கு பெரிய வேகன்கள் பின் சென்றன...
பயண விபரம் எப்படி மிஸ்டர் பர்ரோ?
முதலில் நாம் தெற்கு நோக்கி போகிறோம் மார்ட்டி!
மாண்டெஸுமாவின் அடிவாரத்தில் முதல் முகாமை அமைத்துக் கொள்வோம். பின்னர் மேற்கில் திரும்பி எல்க் தொடர் வரை போவோம். அங்கிருந்து நிலைமையை கண்டறிந்து வர ஸ்கவுட்டுகளை அனுப்பவிருக்கிறேன்.
நல்லது!
மார்ட்டி விலகிச் சென்றதும் செவ்விந்தியன் பக்கம் திரும்பினான் பர்ரோ...
எங்கே இருக்கலாம் என்பது உன் யூகம்?
மூன்று நாட்களுக்கு முன் மந்தை ஹட்ஸன் பள்ளத்தாக்கில் இருந்தது.
எனவே, கணவாய்க்கு சற்று முன்னதாகவே அவற்றை நாம் சந்திக்க முடியும் என்று சொல்!
ஆமாம்!
அந்த மந்தை யிலுள்ள காட்டெருமை களில் ஒன்றிரண்டு வேண்டு மானால் என் வேட்டையர் களின் தோட்டாக் களுக்கு இரையா காமல் தப்பிக்கலாம்!


மூன்று தினங்களுக்குப் பின் -
ஹே! நான் எதிர்பார்ப்பதை ரெட்ஹெட் கண்டு விட்ட மாதிரி தெரிகிறது!
வோ!
கண்ணில் பட்டனவா?
கேட்டாயா?
ம்ம்... இரண்டே நிமிடம் போதும் எங்களுக்கு! -கண்காணாத தொலைவு பறந்து விடுவோம்!
ம்ம்... எல்லோரும் குதிரை மீது பாய்ந்து ஏறுங்கள்!
எண்ணிக்கையில் நிறையவா?
ஏகப்பட்டவை மிஸ்டர் பர்ரோ -பெரிய... மந்தை!



இந்தா... இஷ்டம் போல் குடித்துக் கொள்!
வோ!
நிறைய தோல் கிடைத்தால் போனஸாக இன்னொரு போத்தல் கிடைக்கும் உனக்கு!
ஐந்து நிமிடங்களுக்குப் பின்
யாயா ஆஆஹா...
விரையுங்கள்
பெரிய மந்தையோ?
ஆமாம்...! நீடில்ஸ் அருகேயுள்ள வெளியில் மேய்ந்து கொண்டிருக்கின்றன!
ஜோர்! அதிரடியாக தாக்கி அவை மிரண்டு ஓடத் தொடங்கு முன் நிறைய எருமைகளை வீழ்த்திவிடலாம்!


அதே சமயம் -
வாருங்கள் - போவோம்!
வோ!
யாயாயாவூ
யாாவூ
யீ... யா...
யாா... யாாவூ!


ய்யாவ்
சற்று நேரம் கழித்து -
அந்த சலசலப்பு கேட்க நன்றாக இல்லையே!
காட்டெருமைகள் கூட்டமாக வெருண்டோடி வரும் சப்தம்!
நாசமாகப் போக -யாருடைய வேலையாக இருக்கும்?
செவ்விந்திய வேட்டையர்கள்!
சண்டாளர்கள்...! அவன்கள் எங்கே இங்கே வந்து தொலைத்தார்கள்...! இரைச்சல் நம்மை நோக்கித்தான் நெருங்கி வருகிறது... அகப்பட்டோமோ... தொலைந்தோம்! வாருங்கள் அந்த மேட்டுக்கு ஓடிப் போய்விடலாம்!


யாயாஹூ!
மறு நிமிடம் -
அதோ...!
அவர்கள் ஐந்தாறு பேர்தான்... என்ன செய்யலாம்?
அவர்களை தீர்த்துக்கட்டி விட்டு வேட்டையை தொடருவோம் -வாருங்கள்!
ஆட்டம் ஆரம்பமா கட்டும் தோழர்களே!
டமீல்! டமீல்!
?
ஓ!



ய்யாயீ...
டுமீல்!
டுமீல்!
வீ... வீ
ஆ!
அங்கே கவனி! ஒருவன் தப்பியோடுகிறான்!
அவனை நான் கவனிக்கிறேன்... நீங்கள் மந்தையை கவனியுங்கள்
இப்படியெல்லாம் ஓடி நீ தப்பிவிட முடியாது தம்பி!



ஆ
டுமீல்!
அவனும் ஒழிந்தான்!
இதற்கிடையே, மற்றவர்கள் காட்டெருமைகளை சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தனர்...
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
குதிரைகள் களைத்து சோர்ந்த பிறகே அந்த வெறியாட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தான் மார்ட்டி...
நிறுத்துங்கள்... இப்போதைக்கு இது போதும்!
யாராவது ஒரு ஆள் மிஸ்டர் பர்ரோவிடம் போய் ஒரு வேகனை இங்கே அனுப்பச் சொல்லுங்கள்... வேறொரு நபர் இடைவெளிவிட்டு மந்தையை பின்தொடரட்டும்!


மற்றவர்கள் இவ்விலங்குகளை தோலுரிக்க எனக்கு ஒத்தாசையாக இங்கே இருங்கள்.
முகாமுக்கு நான் போகிறேன்!
தொடர்ந்து காட்டெருமை மந்தையின் பின் சென்று இஷ்டத்திற்கு சுட்டுத்தள்ளி தோலை உரித்துவிட்டு உடல்களை அழுகி நாற விட்டுச் செல்லும் கொடுமை அடுத்த சில தினங்களுக்குத் தொடர்ந்தது...
தன் பிராந்தியத்திற்கு அருகாமையிலிருந்த பகுதியில் நடந்த அந்த அட்டூழியம் பற்றிய சேதியை டெக்ஸ் வில்லர் ஒரு மாதம் தாமதமாகவே அறிய நேர்ந்தது.
நிச்சய மாகவா?
ஆமாம்!
மற்ற சமிக்ஞைகளையும் கண்டேன்... அவையும் நல்ல சேதியை சொல்லவில்லை.
யுத்த சமிக்ஞைகள்... அப்படித்தானே?... ம்ம்... நாம் உடனே நடவடிக்கையில் இறங்க வேண்டும்...


அதையடுத்து -
பாருங்கள்...! இன்னொரு செய்தி!
இம்முறை செய்தி முதியவர் எஸ்குடெரோ விடமிருந்து!
''இரவுக் கழுகாரின் வருகைக்காக எஸ்குடெரோ ஷபாட்கி சமவெளியில் காத்திருக்கிறார்...''


ம்மை வரச் சொல்ல வற்புறுத்துகிறார் என்றால் ஏதோ விபரீதமாக சம்பவித்திருப்பது உறுதி!
புறப்படுங்கள்... குறுக்கு வழியில் போனால் அவர்கள் இருக்கும் இடத்தை மூன்று மணி நேரத்தில் சென்றடைந்து விடலாம்!
படை வீரர்களோடு ஏதேனும் பிரச்சனையாக இருக்குமோ?
ச்சயமாக அப்படி இராது... அம்மாதிரியான வறை தவிர்த்துக் காள்ளும் மதியூகி அவர்....
ம்ம்... பார்ப்போம்
மூன்று மணி நேரம் கழித்து
அக்கிரமம்... அங்கே பாருங்கள்
கொடுமை!
ம் உதவி கோரி எஸ்குடெரோ அழைப்பு விடுத்த காரணம் ஓரளவு விளங்கத் தொடங்கிவிட்டது..!
காட்டெருமை வேட்டையர்கள் இவ்வளவு தூரம் ஊடுருவியது இதுவே முதல் தடவை...


வெறியாட்டம் போட்டிருக்கிறார்கள்!
நாற்றம்... தாங்கவில்லை!
அதே சமயம் ஒரு மேட்டின் மறைவிலிருந்து 20 யுடே வீரர்கள் வெளியேறி வந்தனர்...
அதோ வருகிறார் எஸ்குடெரோ...
அதையடுத்து -
இரவுக் கழுகார் கவனித்தாரா?
எப்போது நடந்தது இந்தக் கொடுமை?
பௌர்ணமியின் போது!
காட்டெருமை மந்தையை துரத்திக் கொண்டு எங்கள் பிராந்தியத்தினுள் வந்தார்கள் வெள்ளை வேட்டையர்கள்... கணவாயை தாண்டியதும் எருமைகளை துப்பாக்கியால் இஷ்டத்திற்கு வேட்டையாடத் தொடங்கி ஓடைப் பகுதி வரை மந்தையை தள்ளிச் சென்றார்கள் - வழி நெடுகிலும் சடலங்களை அழுகி நாறவிட்டு விட்டு!



அவர்களுடைய வெறியாட்டத்தின் முதல்
ட்டத்தைத்தான் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்!
பயங்கரம்
மேலே போகப் போக ... யத்தின் தீவிரம் தெரிய
செவ்விந்திய ஏஜெண்டுக்கு விஷயத்தை தெரிவித்தீர்களா?
ஆமாம்! ... இன ... லைவர்களின் சார்பிலுமாக ... னேன், பதிலாக கிடைத்ததெல்லாம் வ... ச் சொல் சமாதானங்களும், வெறும் உத்தரவாதங்களும் தான்!
வெள்ளையர்களின் உறுதி மொழிகள் எந்த அளவுக்கு நம்பத்தகுந்தவை ன்று இரவுக் கழுகாருக்கே தெரியும்!
நிலவரம் சரியில்லை
அவர்கள் எத்தனை பேர்?
ஐவரின் கைவிரல்களைவிட கூடுதல்!



பெரிய வேகன்கள் வைத்திருந்தார்கள்... ஒன்று நிரம்பியதும் நாலைந்து வேட்டையர்கள் அதை மாண்டி அபாஜோ தடத்தில் கொண்டு போனார்கள்...
கூடுதல் தகவல் அறிந்து வர அனுப்பப்பட்ட வீரர்கள் கழுகுகளுக்கு இரையாகப் போனதுதான் மிச்சம்!
உடனடியாக அந்த அக்கிரமக்காரர்களை அடக்காவிட்டால் இங்குள்ள செவ்விந்திய இனத்தவர்களை பூண்டோடு அழித்துவிட்டுப் போய் விடுவார்கள்...
உண்மைதான்!
உங்களுடைய வீரர்களின் ஒத்தாசை எனக்குக் கிடைக்குமா?
யுத்த வழி முறையை கடைப்பிடிக்கப் போகிறீர்களா?
நீங்கள் நினைப்பது போல் இல்லை - வீரர்களின் துணையோடு வேட்டையர்களை தடுத்து நிறுத்தி இங்கிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்தப்படுத்தப் போகிறேன்!
?!
மிச்சத்தை நாங்கள் மூவரும் பார்த்துக் கொள்வோம்...! ஏனெனில், அமெரிக்க அரசோடு நீங்கள் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையை மீறிய குற்றச்சாட்டு உங்கள் மீது வரக்கூடாதில்லையா!
ஹோ


நானும் என் வீரர்களும் உங்களுடைய ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கத் தயார்!
நல்லது... எல்லோரும் இப்போது நான் சொல்லப் போவதை கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்!
அக்கிரமக் காரர்களின் அட்டூழியத் திற்கு முடிவு கட்டும் வழிமுறையை டெக்ஸ் அவர்களுக்கு விளக்கிச் சொல்லி முடித்தார்... முடிவில் -
என் திட்டம் ஒருவேளை பலிக்காமல் போகலாம்... ஆனால் அவர்களை இங்கிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்க வேறு வழிவகை தெரியவில்லை எனக்கு...
இரவுக் கழுகளின் பேச்சு விவேகமானது!
வோ...!
சரி... அப்படி யானால் கிளம்புங்கள்
அஸ்தமனத்திற்கு இன்னும் சிலமணி நேரமே உள்ளது.
நம் திட்டத்தின் முதல் கட்டத்தை செவ்வனே நிறைவேற்ற வேண்டு மானால் நாம் வேகமாக செயல்பட வேண்டும்!


அதே சமயம் - க்ளே ஹில்ஸின் கிழக்கே...
எருமைகளை தென்திசையில் கொண்டு போகச் சொல்கிறார் பர்ரோ...
என்ன சேதி?
பான் ஜீவான் ஆறும், கொலரேடோ நதியும் V வடிவில் சந்திக்கும் ஒரு முக்கோணப் பரப்பு இருப்பதாகவும், அந்தப் பகுதியினுள் எருமைகளை துரத்திவிட்டால் பின்னர் அவை தப்பியோட வகையே கிடையாது என்றும் நம் செவ்விந்திய கைக்கூலி சொன்னானாம்!
STRAIGHT CLIFFS
RIVER
CLAY HILLS
COLORADO
S. JUAN RIVER
RAINBOW BRIDGE
HAVAJO M.T.
ஓகோ...! அதன் பிறகு அவைகளை வேட்டையாடுவது ரொம்ப தமாஷான காரியமாக இருக்கும்!
பர்ரோசும் இதையேதான் சொன்னார்!
செவ்விந்திய பிராந்தியத்தினுள் நாம் மேலும் ஆழமாக ஊடுருவியதாகி விடக்கூடும்!
அதனால்?
செவ்விந்திய ஏஜெண்டோடு பர்ரோ ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் அது சட்டவிரோத காரியமாகாது!
செவ்விந்தியர்கள் ஒப்பந்தத்தைப் படித்து அட்சர சுத்தமாக அதைக் கடைப்பிடிப் பார்களென்று நம்புகிறாயா?


கொன்றுவிடுவார்கள் என்று பயப்படுகிறாயா?
பணம் சம்பாதிக்கிற பேராசையில் உயிரையே போக்கிக் கொண்டு விடக்கூடா தில்லையா...!
பயப்படாதே...! அந்த காட்டுமிராண்டிகள் அப்பாவித்தனமாக போகிறவர்கள் மீது வெறித்தனமாக பாய்வார்களே தவிர நம் மாதிரி துப்பாக்கி வைத்திருப்பவர்களை கண்டால் நடுநடுங்கி ஓடிப் போய் பதுங்கிக் கொள்வார்கள்.
அப்படியானால் கிளம்புங்கள்... நேரத்தை வீணடிக்கலாகாது என்று பர்ரோ சொன்னார்... மற்ற குழுவினர்களை அழைக்கச் செல்கிறேன் நான்.
ஓ.கே.!
ஆனால் ஒரு மணி நேரம் கழித்து...
ஹே... அங்கே கீழே பாருங்கள்!
?!
ஐயோ!
புகை சமிக்ஞை!


அந்தப் பக்கம் - ஏகப்பட்ட சமிக்ஞைகள்
இது -நல்லதற் கில்லை!
இந்த திசையில் இன்னொன்று!
அதே சமயம் தெற்கே பல மைல் தொலைவில் -
கெட்டது காரியம்... அவை யுத்த அறிவிப்பு
எல்லா திசைகளிலிருந்தும் எழுகின்றன... ஆபத்து!


பர்ரோ இருக்குமிடம் சென்றால் இதற்கு என்ன அர்த்தம் என்று அந்த செவ்விந்திய பயலை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்!
அதே சமயம் -
வோ... அவை நவஜோ பகுதியை நோக்கிப் போகின்றன...
இரவுக் கழுகுக்கு இதை தெரிவிப்போம்!
இப்படி எருமைகள் பெரிய நதியை நோக்கி தொடர்ந்து ஓடினால் நவஜோக்களும் நடவடிக்கையில் இறங்க வேண்டி வரும்
சற்றைக்கெல்லாம் புது புகை சமிக்ஞை ஒன்று வானோக்கி எழும்பலாயிற்று...
அதைப் பார்த்த டெக்ஸ் திருப்தியடைந்தவர் போல் தலையை ஆட்டினார்.
அந்த அதிபுத்திசாலிகள் செய்யப் போகிற காரியம் புரிகிறது... பான் ஜீவான் கொலரேடோவோடு சங்கமிக்கும் முக்கோணப் பரப்பினுள் எருமைகளை துரத்த நினைக்கும் முயற்சி அது.


ஆனால் அது மடத்தனமான காரியம்!
ஏதோ ஒரு திட்டத்தை மனதில் வைத்துக் கொண்டு நீங்கள் இதைச் சொல்வதாகத் தெரிகிறது...
ஆமாம்... அதை நான் வெளியிடு முன், ரெயின்போ பாலத்தருகே முகாமிட்டிருக்கும் நவஜோக்களுக்கு நாம் இப்போதே ஒரு புகை சமிக்ஞை அனுப்ப வேண்டும்!
நல்லது
இதற்கிடையே - வடக்கே சுமார் 20 மைல் தொலைவில்...
புகை சமிக்கைகளைக் கண்டதால் திரும்பிவிட்டாயாக்கும்?
ஆமாம் மிஸ்டர் பர்ரோ...! உங்களுடைய செவ்விந்திய கைடு இதுபற்றி என்ன சொல்கிறான்?
யுடோ வீரர்களுக்கு யுத்தத்திற்கான அழைப்பு அது!
எத்தனை பேர்?
பத்துப் பதினைந்து...! அல்லது பல மடங்காகவும் இருக்கலாம்!


இவனை மேலும் வற்புறுத்துவதில் அர்த்தமில்லை மார்ட்டி! அந்த சமிக்ஞைகள் பற்றிய விபரம் கேட்டு நான் எவ்வளவோ முயன்றும் பயல் வாயைத் திறக்க மறுத்துவிட்டான்!
என்ன செய்யப் போகிறீர்கள் ?
நம் ஆட்கள் பத்து மைல் சுற்றில் பரவிக்கிடக்கிறார்கள்... இந்நிலையில் யுடேக்கள் நம்மை தாக்கினால் நிலைமை படுமோசமாகிவிடும்
எல்லோரையும் இங்கே வரச் சொல்லி தகவல் அனுப்ப தீர்மானித்திருந்தேன்... உன் கருத்து என்ன?
வேறு மாற்று உபாயம் ஏதுமில்லை!
மற்றவர்களுக்கு தகவல் தரும் பொறுப்பை நான் எடுத்துக் கொள்கிறேன். நீங்கள் இங்கே சதுர பரப்பில் நான்கு மூலையிலும் தீ மூட்டுங்கள்....
கடைசி நபரும் இங்கே வந்து சேரும்போது பின் மாலைப் பொழுதாகி விடும்... நான்கு முனை தீ அவர்களுக்கு நம்பிக்கை தருவதாக இருக்கும்.
நல்ல யோசனை!
அதையடுத்து மார்ட்டி அங்கிருந்து வேகமாக கிளம்பிப் போனான்...



புகை சமிக்ஞைகள் சங்கிலித் தொடர் போல் தொடுவானில் அடுத்தடுத்து எழுந்த வண்ணமிருந்தன...
நாசமாகப் போகிற புகை சமிக்ஞைகள் ஓயவே ஓயாதா..?
அத்தனை வேட்டையர்களும் ஓரிடத்தில் குவிந்து பத்திரமாக பராமரிக்கப் படும் சதுரத்திற்குள் வந்துவிடும் வாய்ப்பு இருந்தது...
இன்னும் கொஞ்சம் தீ மூட்டுவோமா?
அவசியமில்லை...! செவ்விந்தியர்கள் இரவில் தாக்கமாட்டார்கள் என்று கைடு சொல்கிறான்
நான்கு மூலையிலும் ஆயுதம் ஏந்திய வீரர்கள் நின்றால் போதுமானது.
இரவை நிம்மதியாக கழித்துவிடலாம் என்ற அவர்களுடைய நம்பிக்கை நள்ளிரவில் சிதைந்து போனது...
நரியின் சல சலப்போ...?
ஊள் ஊள்.. ஊள்..
டைகரின் சமிக்ஞை... - ஆரம்பி!
வோ!


செவ்விந்திய நீசர்கள்!
ஆபத்து!
அதை தொடர்ந்து பல தீ அம்புகள் சீறி வந்து முகாமில் இருந்த வேகன்கள் மீது படிந்து அவற்றை பற்றி எரியச் செய்தன...
நாசம்!
எழுந்திரு - ஓடு!


செவ்விந்தியர்கள்!
நாசமாகப் போக
ஐயோ... தீ!
குதிரைகளுக்கு ஆபத்து!
நுகத்தடியிலிருந்து கழற்றி விடு!
தறி கெட்டு ஓடுகின்றன!
பிடியுங்கள் -விடாதீர்கள்!


ஆனால் அங்கே நிலவிய அமளியில் யாரும் எதுவும் செய்ய இயலவில்லை... தறிகெட்டு ஓடிய குதிரைகள் இருளினூடே புகுந்து மறைந்துவிட்டன...
குதிரைகள்?
தொலையட்டும்...! செவ்விந்தியர்களைப் பற்றி நினையுங்கள்!
அவர்கள் எந்த வினாடியிலும் நம்மை தாக்கக் கூடும்
சைத்தான்கள்!
பின் வாங்கு - வந்த வேலை முடிந்து விட்டது!
மற்றவர் களுக்கு தெரியப் படுத்து!
வோ!


பின்வாங்கச் சொல்லி சமிக்ஞை அனுப்பு!
உயர்ந்து வளர்ந்திருந்த புற்களினூடே தவழ்ந்து ஊர்ந்து வந்தது போலவே இரகசியமாக பின்வாங்கி மறைந்தார்கள்...
முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டிருந்த இலக்கில் அந்தக் குழு டெக்ஸை சந்தித்தது...
தாக்கி நந்தோமேயானால் சுலபம க அந்தக் குழுவை பரலோகம் அனுப்பியிருக்கலாம்!
அம்மாதிரி செய்திருந்தோமேயானால் பின் விளைவு எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்று அனுபவம் மிக்க தலைவர் நீங்கள் அறியாததா?
ம்ம்... இரவுக் கழுகாரின் பேச்சில் விவேகம் இருக்கிறது
இந்த வேட்டையர்கள் யாரோ ஒரு பெரிய வியாபாரியின் கூலிப்பட்டாளமாக இருக்கலாம் அந்தப் பெரிய மனிதருக்கு அரசாங்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு இருக்கலாம்!
இங்கே இரத்தம் சிந்தினால் இராணுவம் நம் ஜனங்கள் மீது ஆக்ரோஷமாக பாயும் அபாயமும் உண்டு...



வெருண்டோடிய குதிரைகளை மட்டுமாவது நம் சொந்தமாக்கிக் கொள்ளலாமில்லையா?
ஓ... தாராளமாக!
அவை கண்காணாமல் போய்விடுமுன் ஓடிச் சென்று மடக்குங்கள்... மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்...
ஒரு தாக்குதலை சமாளிக்க சிலர் முன்னேற் பாடுகளை செய்து கொண்டிருக் கையில் மற்றவர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்...
ஆனால் தீயின் வாயிலிருந்து எதையும் பறித்து மீட்டுவிட
முடியும் என்று தோன்றாத நிலையில் மனச் சோர் வடைந்தனர்...
விலகு... விலகு
என்னமாய் பற்றி எரிகிறது!
தாக்குதல் எந்த வினாடியிலும் சம்பவிக்கலாம் என்கிற பீதி உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருந்ததால் தீயை அணைக்கும் முயற்சியில் அவர்களால் தீவிரம் காட்டமுடியவில்லை.
எனவே... ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே அனைத்து வேகன்களும் எரிந்து சாம்பலாகிப் போயின...
எல்லாவற்றையும் இழந்து விட்டோம்!
நம் துரதிர்ஷ்டம் இத்தோடு முடிந்து விடவில்லை!


குழப்புகிறதே! செவ்விந்தியர்கள் ஏன் இன்னமும் தாக்கத் தொடங்கவில்லை?
இந்த தாமதம் பயத்தில் நாம் துவண்டுவிட செய்யும் யுக்தியோ?
ஒருவேளை... விடியட்டும் என்று காத்திருக்கிறார்களோ... என்னவோ ?!
சாக்கடை புழுக்கள்!
நீ என்ன நினைக்கிறாய்?
யுடேக்கள் இரவில் தாக்குவதில்லை என்று கேள்வி!
அப்படியானால் அதை முறியடிக்க சில ஏற்பாடுகளை செய்ய எனக்கு அவகாசம் இருக்கிறது.
என்ன திட்டம் வைத்திருக் கிறீர்கள் மிஸ்டர் பர்ரோ?
வேகமாக ஓடிப் போய் மாண்டி ஸெல்லோவிலிருந்து உதவி கோரலாம்...
நடக்கிற காரியமா?
ஆபத்தான முயற்சிதான்... வேறு வழியில்லை... இடைப்பட்ட வேளையில் முகாமை சுற்றி பள்ளம் தோண்ட ஏற்பாடு செய்.
ஓ.கே!


மறு நிமிடம் பர்ரோ இருளில் மறைந்து போனான்...
பிடி... ஓட்டம்!
நீ ஓடுகிற ஓட்டத்தில் தான் இருக்கிறது எங்களுடைய எதிர்காலம்.
முகாமில் மிச்ச இரவு முழுவதும் பயம் கலந்த எதிர்பார்ப்போடு கழிந்தது - விடியும் வேளையில்...
சுடுங்கள்!
கூடாது!
அதோ... வருகிறார்கள்
சுடாதீர்கள்... சுடாதீர்கள்
சில நிமிடங்களுக்குப்பின் டெக்ஸ் வில்லர், கிட் டைகர் மூவரும் முகாமின் எல்லையில் வந்து நின்றனர்.
ஹலோ...!
ஹலோ... வழியில் யாராவது செவ்விந்தியர்களை பார்த்தீர்களா?



தொலைவில் இருக்கக் கண்டேன்... நேற்று யுடே இன இளைஞர்கள் அனைவரையும் திரண்டு வரச் சொல்லி அவர்கள் அனுப்பிய புகை சமிக்ஞையையும் பார்த்தேன்.
அவர்கள் உங்களை கொல்ல முயற்சிக்கவில்லையா?
அந்த அராஜகத்தை ஏன் அவர்கள் செய்ய வேண்டும்? நாங்கள் அவர்களுடைய பிராந்தியத்தினுள் இருந்தாலும் தப்பாக எதையும் செய்யவில்லையே!
நாங்களும் தான் தப்பாக எதுவும் செய்யவில்லை... ஆனால் நேற்றிரவு எங்களைத் தாக்கி எங்களுடைய வேகன்களை தீயிட்டு எரித்துவிட்டார்கள்
காட்டெருமைகளின் பிணங்களை வழிநெடுக நாற்றமடிக்க விதைத்திருக்கும் வேட்டைக் கும்பல் நீங்கள் தானே?
ஆமாம்!
தோலை சேகரிக்க வேட்டை யாடினோம்!
அதுதான் தப்பாகி விட்டது!
எருமைகளின் மாமிசம் தான் யுடேக்களுக்கு உணவு... அதை நீங்கள் நாசப்படுத்துவதை எப்படி அவர்கள் சகித்துக் கொண்டு சும்மா இருப்பார்கள்?
கேளுங்கள் இவர் சொல்வதை!


ஐயா பேசும் முறையை பார்த்தால் செவ்விந்தியர்களின் நண்பரோ என்று நினைக்கத் தோன்றுகிறது
உண்மை அதுதான்!
அப்படியானால் நீ உயிர் பிழைக்க ஒரே வழி உடனே குதிரையிலேறி இங்கிருந்து...
ஏய்... நீ -
அசையாதீர்கள்!
அசைந்தால் கபால ஓடு சிதறிப் போகும். ஜாக்கிரதை
?!
எழுந்திருடா... சொறி நாயே! பாக்கியையும் வாங்கிக் கொள்!
சும்மா... கொக்கரிக்காதே!
உன்னை பிறகு கவனித்துக் கொள்கிறேன்...
வாய்ச் சவடாலா?


மறுபடியும் எங்கேயாவது நீ எதிர்ப்பட்டால் தெருவை கூட்ட உன் சடலத்தைத்தான் பயன்படுத்துவேன் - ஜாக்கிரதை!
?!
அப்போது - தொலைவில் புதிதாக சில புகை சமிக்ஞைகள் எழும்பின...
அங்கே கவனியுங்கள்
யுடேக்கள் போருக்கு தங்களை மும்முரமாக தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்... நானாக இருந்தால் குதிகால் பிடரி அடிக்க இந்நேரம் ஓடிப் போயிருப்பேன் - இங்கிருந்து...
ஹூம்... பர்ரோவோடு உறவு வைத்துக் கொண்ட வேளை சரியில்லை!
யார் அந்த பர்ரோ?
இந்த வேட்டையை திட்டமிட்ட பெரிய மாண்டிஸெல்லோ வியாபாரி...
யுடே செவ்விந்தியர்களின் ஏஜெண்டிடமிருந்து இதற்கான பெர்மிட்டை வாங்கினார்...
கொஞ்சம் பொறு...


செவ்விந்திய பிராந்தியத்தில் வேட்டையாட செவ்விந்திய ஏஜெண்ட் ஒருவன் பெர்மிட் கொடுத்தானா - இது என்ன புதுக்கதை?
ரெட் ஹெட்டிடம் கேள்!
காட்டெருமைகளின் இடத்தைக் காட்ட அந்த ஏஜெண்ட் அனுப்பி வைத்த கைடு இவன்தான்...
உன் பெயர் என்ன?
ட்வோகா...! ஏஜெண்ட் மாயரின் கைடு நான்!
யார் -கிறிஸ்டி மாயரா?
வெள்ளையர்கள் காட்டெருமைகளை வேட்டையாடுவார்கள். பதிலுக்கு யுடே மக்களுக்கு வியாபாரி பர்ரோ துப்பாக்கியும், தோட்டாக்களும் வாரி வழங்குவார் என்று ஏஜெண்ட் சொன்னார்.
அடி சக்கை!
யுடேக்களின் கண்ணீரை துடைக்க கைக்குட்டை தரக்கூட யோக்யதை இல்லாத மாயர், இல்லாத அதிகாரத்தை பயன்படுத்தி பெர்மிட் கொடுத்ததன் மூலம் ஏகப்பட்ட ஜனங்களின் உயிருக்கு ஆபத்தை வரவழைத்திருக்கிறான்.
வெள்ளையரின் பேச்சில் விஷம் தோய்ந்திருக்கிறது


இடியட்!
கும்!
நாவை அடக்கிப் பேசு!
மறுகணம் அந்த யுடே தன் கத்தியை உருவி எடுத்து டெக்ஸ் மீது பாய்ந்தான்
உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்
ஆனால் டெக்ஸ் மின்னல் வேகத்தில் செயல்பட்டார்...
டுமீல்
ட்வோகா... ஓடிப் போய்விடு இங்கிருந்து!
சற்று நேரத்தில் நூற்றுக் கணக்கில் யுடேக்கள் இங்கே வரவிருக் கிறார்கள்
தங்கள் ஆள் ஒருவன் எதிரணியில் இருக்கக் கண்டார்களேயானால் உன்னை சித்திரவதை செய்து கொல்வார்கள்!




இந்தப் பிராந்தியத்தை விட்டே வெளியேறி ஓடிப்போய்விடு - திரும்பி வர எண்ணாதே... அதுதான் உனக்கு நல்லது
திரும்பி ஓடி வரும் எருமைகளின் பாதையில் நீங்கள் அகப்பட்டால் உங்கள் கதி என்னவாகும் – எண்ணிப்பார்!
எருமைகளை பொறியில் மாட்ட நீ போட்ட திட்டத்தை முறியடிக்கும் முயற்சியில் நவஜோக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்...
ஆனால் -செவ்விந்தியர்கள்?
அந்த இடைவெளை போதும் உங்களுக்கு - செவ்விந்திய பகுதியை விட்டு வெளியேற!
என் யோசனைப்படி நீங்கள் நடப்பதானால் மறு உதயம் வரை உங்களை தாக்க வேண்டாம் என்று அவர்களுக்கு சமிக்ஞை அனுப்புகிறேன்!



உன் முடிவு என்ன?
வேறு வழியில்லை என்று தோன்றுகிறது - உங்கள் ஆலோசனைப்படியே செய்கிறோம்!
உயிர் தப்ப அது ஒன்றுதான் வழி -தாமதித்தால் யுடேக்களின் கையில் சிக்கி, உங்களால் எருமைகளுக்கு கிடைத்த அதே மரியாதைதான் உங்களுக்கும் சம்பவிக்கும்...
மண்டைத் தோலை உரித்து, கழுகுகளுக்கு இரையாக்கி விடுவார்கள்
ஐயோ!
சரி... நான் கிளம்புகிறேன்!
ஒரு விஷயம்... கௌ-பாய்!
உன் பெயர் என்ன?
டெக்ஸ் வில்லர்!
நே... - கடவுளே!
கீர்த்தி மிக்க ரேஞ்சர்!?


வாருங்கள் தோழர்களே... ஓடிப் போய்விடுவோம் இங்கிருந்து. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் உயிருக்கு உத்தரவாதமில்லை...
எருமைகள் வந்து சேருமுன் கணவாயை நாம் தாண்டத் தவறினால் தொலைந்தோம் அத்தோடு!
செவ்விந்தியர்கள் நாசமாகப் போக!
அதே வேளையில் - தெற்கே 10 மைல் தொலைவில்...


இடி முழக்கமிட்டவாறு, புழுதியை வானுயர கிளப்பிக் கொண்டு காட்டெருமை கூட்டம் வெறிபிடித்தாற்போல் நாற்கால் பாய்ச்சலி ல் க்ளே பள்ளத்தாக்கு நோக்கி ஓடி வந்தது...
ஆயிரக் கணக்கான எருமைகள் பூமி அதிர ஓடி வந்த வேகத்தை கண்ணுற்ற வேட்டையர்களுக்கு மரண பீதியில் முதுகுத் தண்டு ஜில்லிட்டுப் போனது...
ஐயோ... காட்டெருமைகள்.
எழும் புழுதியை பார்த்தால் இடைவெளி சில மைல் தொலைவு தான் இருக்கும் என்று தோன்றுகிறது.
ஏறுங்கள்... ஓடிவிடலாம்!
தப்பியோட அவகாசமில்லை... உயிர்பிழைக்க நமக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு அவை இங்கே வந்தடையுமுன் அந்த மேட்டுப் பகுதியில் நாம் ஏறிக்கொண்டு விடுவதுதான்...
சரி... ஓடுங்கள்
வேகமாக ஓடத் தடையாக இருந்த சுமை ஒன்று பாக்கியில்லாமல் கீழே எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.
சீக்கிரம்!
தப்பிப் போமா?
தட்டுத் தடுமாறி ஏறி அவர்கள் பாறைகளோடு ஒண்டிக் கொண்ட மறு கணமே அங்கே வந்து சேர்ந்த வெறிபிடித்த எருமைக் கூட்டம் அந்த மேட்டுப் பகுதியை மொத்தமாக சூழ்ந்து கொண்டது...
தொபு..
தொபு..
தொபு..



இதற்கிடையே மாண்டிஸெல்லோ செல்லும் வழித்தடத்தில்
அந்த பர்ரோவை சந்திக்க துடிப்பாக இருக்கிறது எனக்கு...
எனக்கு மாயரை மீண்டும் பார்க்க வேண்டும்.
சரக்கு அனுப்பப்பட்டதில் சில குளறுபடிகள் இருப்பதாக அவன் மீது ஏற்கனவே ஒரு குற்றச்சாட்டு வந்தது... தான் யோக்கியன் என்று அடித்துச் சொல்லி தப்பித்துக் கொண்டுவிட்டான்...
ஆனால் இம்முறை... அந்த வேட்டையர்கள் சொன்னது மட்டும் உண்மையாக இருக்குமேயானால், குற்றத்தை அவன் வாயாலேயே ஒப்புக் கொள்ள வைப்பேன்
உண்மை யாகத்தான் இருக்கும்.
அப்படியானால் அவனுக்கு உடனடியாக ஒரு நல்ல எலும்பு முறிவு நிபுணரின் சேவை தேவைப் படும்.
அதே நாளில் - அஸ்தமன வேளையில்... மாண்டிஸெல்லோவில்...
கிறிஸ்டியன் மாயர்...
பயலுக்கு நூறு வயது -அங்கே பாருங்கள்... யாரென்று!


அதே கணத்தில் -
?!
குதிரையில் வருகிறவர்கள் உன்னையே முறைத்துப் பார்க்கிறார்களே -யார் அவர்கள்?
ஊர் வம்புகளில் சம்மன் இல்லாமலே ஆஜர் ஆகும் கோவில் காளைகள்...! வெள்ளையர்கள் - நவஜோ ஏஜெண்டும் அவருடைய மகனும்...! மூன்றாவது நபர் அவர்களுடைய செவ்விந்திய தோழன்.
வம்பு இழுக்க வருகிறார்களோ?
பயப்படாதே...! அவர்களுடைய அதிகாரம் இங்கே செல்லுபடியாகாது...
ஹலோ மாயர்... உன்னை இங்கே சந்தித்தது ஏன் அதிர்ஷ்டமே!
என்னை தேடினாயா என்ன?
ஆமாம்! சுற்றி வளைக்காமல் சொல்வதானால் உன்னை இங்கிருந்து துரத்தியடிக்கவே தேடினேன்...
புரிய வில்லையே உன் பேச்சு!
30 செகண்டுகளில் புரிந்துவிடும்! முதலில் உன் கண்ணாடியை கழற்றி கையில் எடுத்துக் கொள்!
எதற்காக? -புரிய வில்லையே!


நன்றி
கும்!
ஏய்... மிஸ்டர்... என்ன இது -அடாவடித்தனம்?
நீ யார் - அதைச் சொல்... முதலில்!
என் பெயர் பர்ரோ... நான் யாரென்று உனக்கு தெரியவில்லை என்றால் -
போதும் நிறுத்து!
உன் காலடியில் விழுந்து கிடக்கும் இந்த சாக்கடைப் புழுவின் சகாயத்தோடு உன் பையை நிறைத்துக் கொள்ள நீ தீட்டிய வெறியாட்டத்தின் முழு விபரமும் நானறிவேன்.
இங்கிருந்து நீ உடனே ஓடிப் போகாவிடில் உனக்கு நேரப் போகும் கோர முடிவையும் நானறிவேன்.
பாஸுக்கு நேரம் சரியில்லை என்று நினைக்கிறேன்.


இங்கிருந்து நீ சொந்தக் கால்களை பயன்படுத்தி வெளியேறப் போகிறாயா -இல்லை... சவப் பெட்டிக்குள் சௌகரியமாக காலை நீட்டிக் கொண்டா என்பதை மட்டும் என்னால் நிச்சயமாகத் தீர்மானிக்க முடியவில்லை!
பேசி முடித்து விட்டாயா?
நீ சொல்ல என்ன இருக்கிறது?
உன் குற்றச் சாட்டுக்கு என் பதில் இதோ -
செவ்விந்திய பகுதியில் எருமைகளை வேட்டையாட ஏஜெண்டோடு சட்டபூர்வமாக நான் செய்து கொண்ட ஒப்பந்தம்! உனக்கு படிக்கத் தெரியுமில்லையா?
ஓ... படிக்கவும் தெரியும்...
ஏய்... அதிகப் பிரசங்கி
கிழிக்கவும் தெரியும்!
இடியட்!
!
தோழர்களே... ஓடி வாருங்கள் - பாஸுக்கு பிரச்சனை!
போய் உதவிடு வோம்!


டுமீல்
கீழே விழுந்து பதுங்குங்கள் மிஸ்டர் பர்ரோ!
ஜ
கும்!
கீழே விழச் செய்ய நானாயிற்று!
அதே கணத்தில் டைகரும், கிட்டும் மின்னல் வேகத்தில் செயல் பட்டார்கள்...
டுமீல்!
டுமீல்
சைத்தான்கள்
?!
டுமீல்!
டுடுமீல்!
ட்ராங்!
தராங்!


இது - எங்களுடைய ஆற்றலுக்கு கோடி காட்ட! வெளியே தலை நீட்டினீர்களேயானால் உங்களுக்கும் இந்தக் கதிதான்!
புரிந்ததா... அடிமடையர்களே?
?!
மூட்டை முடிச்சுகளை தூக்கிக் கொண்டு இங்கிருந்து ஓடிப் போய்விடுங்கள்...
இந்த அறிவுரையை நீங்கள் புறக்கணித்தால் பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பாளி அல்ல -சொல்லி விட்டேன்
நீங்கள் இருவரும் எழுந்து வாருங்கள் -உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும்!
வில்லர்... உன்னை நான் கோர்ட்டுக்கு இழுப்பேன்!
கொம்பனா நீ - என்னைப் போல் நீயும் ஒரு சராசரி ஏஜெண்ட் தானே - ஆஆ!
ஓம்



சாக்கடையில் நெளியும் அற்பப் புழுவே... நீயும் நானும் ஒன்று என்றா சொன்னாய்? - எழுந்து நில்லடா நாயே... நீ கீழே கிடப்பதால் பூமியின் புனிதம் கெட்டுப் போகிறது!
அப்போது -
யாரது... டெக்ஸ் வில்லரா - இங்கே எப்படி?
ஹே... டெக்ஸ்!
ஓ... ஷெரீப் ட்ராவரா!
என்ன நடந்தது? அமைதி நிலவும் என் ஏரியாவிலும் பிணங்களை நடுத் தெருவில் விதைத்து விட்டுப் போக வா வந்தாய் ?
இல்லை - களை எடுத்துவிட்டுப் போக வந்தேன்!
உளறாதே - இவ்விருவரும் யாரென்று நினைத்தாய்?
விட்டால் ஓடிப் போய் விடத்துடித்துக் கொண்டிருக்கும் அராஜகப் பேர்வழிகள் இவர்கள்.
ம்ம்...?





சவடால் பேச்சு வேண்டாம் - நீ யார் போகச் சொல்லி எங்களுக்கு உத்தரவிட..?
கும்!
பர்ரோ... மறுபடியும் ஏதாவது பெனாத்தினாயானால் பற்களை தட்டி கையில் கொடுத்து விடுவேன் -ஜாக்கிரதை!
அமெரிக்க அரசு செவ்விந்தியர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு முரணாக, ஆட்களை அனுப்பி காட்டெருமைகளை நூற்றுக் கணக்கில் கொன்று குவித்திருக்கிறான் - சுயலாபத்திற்காக. இவனுக்கா ஷெரீப் நீங்கள் பரிந்துகொண்டு வருகிறீர்கள்?
முறைப்படி மாயரோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கி றேனாக்கும்!
அப்படியொரு முறைகேடான ஒப்பந்தம் செய்து கொள்ள எந்த ஏஜெண்டுக்கும் அதிகாரம் கிடையாது! இல்லையா - மாயர்?
யார் சொன்னது?
நான் சொல்கிறேன்!
கும்!


அந்த ஒப்பந்தத்தில் நீ கையெழுத்திட இந்த விஷமி உனக்கு எவ்வளவு தொகை லஞ்சமாகக் கொடுத்தான் -சொல்!
அபாண்டமாக பேசாதே!
மூடு வாயை!
நான் பணம் எதுவும் -
சத்!
உன் கையாள் ட்வோகா ஏற்கனவே உண்மை முழுவதையும் உள்ளது உள்ளபடி சொல்லிவிட்டான் -உன் வாயிலிருந்து வரட்டுமே என்று கேட்டேன்!
ம்ம்... இப்போதாவது நிஜத்தைப் பேசு -
வீணாக அலட்டிக் கொள்கிறாய்
வாஷிங்டனில் இருப்பவர்களுக்கு மட்டுமே பதில் சொல்ல கடமைப் பட்டவன் நான்... என் அறிக்கை அங்கே இருப்போர் கையை எட்டியதும் உனக்கு நேரப் போகும் துரதிர்ஷ்டம்..
கும்
என்னையா மிரட்டுகிறாய்... அற்பப் புழுவே... நான் நீயாக இருந்தால் சில 'நண்பர்கள்' மீது அபரிமித நம்பிக்கை வைக்கமாட்டேன்.



தோற்றுவிட்டவனுக்கு நண்பர்கள் இருக்கமாட்டார்கள் மாயர் - புரிந்து கொள்!
இவன் பேச்சைக் கேட்காதே மாயர் எனக்கும் செல்வாக்குள்ள நண்பர்கள் பலர் இருக் - அச்ச...!
கும்!
உங்களை ஒன்று எச்சரிக்கிறேன்,... 24 மணி நேர அவகாசம் தான் உங்களுக்கு - ஓடிப் போய் விடுங்கள் இங்கிருந்து...
அதன் பிறகும் இங்கே தென்பட்டீர்களேயானால் தோட்டாக்களால் சல்லடையாகத் துளைத்துவிடுவேன் -ஜாக்கிரதை!
?!
புரிந்ததா?
கும்!
நீ இப்படி யெல்லாம் எங்களை மிரட் -


டாடி... உங்களுடைய செய்தி இன்னமும் இவன்களுக்கு உறைக்கவில்லை என்று தோன்றுகிறது
!
தொப்
இன்னொரு யோசனையும் உனக்கு சொல்ல ஆசைப்படுகிறேன்
செவ்விந்திய பகுதியினுள் போய் விடாதே... எந்த ஒரு யுடேயின் பார்வையில் நீ பட்டாலும் அதே கணத்தில் தோட்டாவுக்கோ தொண்டையில் இறங்கும் கத்திக்கோ நீ பலியாவது சர்வ நிச்சயம் . . .
அகால மரணத்தை தவிர்க்க விரும்பினால் குதிரையிலேறி ஓடிப்போய் விடுங்கள் நொடிப் பொழுதையும் இங்கே வீணடிக்காமல்...
அதிர்ச்சியில் வாயடைத்துப் போன அவ்விருவரும் வேறெதும் பேசாமல் அங்கிருந்து அகன்றனர்.




லயன் காமிக்ஸ் மாத இதழ் வெளியிடுவோர் :
**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
*தபால் பெட்டி எண் : 374, 8/D-5, சேர்மன் P.K.S.A.A. ரோடு,*
*அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189. ஆசிரியர் : S. விஜயன்.*
*அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ்,*
Phone : 04562 - 21159/72649 Fax : 04562 - 21159



# லயன் லிஸ்ட்

ஜூலை 1984 **1 - 130 வரை!**

1. கத்தி முனையில் மாடஸ்டி பிளைஸி
2. மாடஸ்டி IN இஸ்தான்புல்
3. ஸ்பைடர் - எத்தனுக்கு எத்தன்
4. டாக்டர் டக்கர்
5. இரும்பு மனிதன் (தீபாவளி மலர்)
6. கபாலர் கழகம்
7. பாதாளப் போராட்டம்
8. கொலைப் படை (பொங்கல் மலர்)
9. பயங்கர நகரம்
10. கடத்தல் குமிழிகள்
11. மரணக் கோட்டை
12. பழி வாங்கும் பொம்மை
13. சதி வலை (கோடை ஸ்பெஷல்)
14. காணாமல் போன கடல்
15. சைத்தான் விஞ்ஞானி (ஆண்டு மலர்)
16. உலகப் போரில் ஆர்ச்சி
17. யார் அந்த மினி-ஸ்பைடர்?
18. இஸ்தான்புல் நாடகம்
19. தலைவாங்கிக் குரங்கு (தீபாவளி மலர்)
20. ஆப்பிரிக்க சதி
21. மனித எரிமலை (பொங்கல் மலர்)
22. சதுரங்க வெறியன்
23. மாஸ்கோவில் மாஸ்டர்
24. தங்க வேட்டை
25. கோடை மலர் '86
26. அதிரடி வீரர் ஹெர்குலஸ்
27. பனிங்குச் சிலை மர்மம் (ஆண்டு மலர் II)
28. மர்ம எதிரி
29. நீதிக் காவலன் ஸ்பைடர்
30. யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி?
31. தீபாவளி மலர் '86
32. மீண்டும் ஹிட்லர்!
33. பழி வாங்கும் பாவை
34. புரட்சித் தலைவன் ஆர்ச்சி
35. மரண மாஸ்டர்
36. கோடை மலர் '87
37. காணாமல் போன கோடீஸ்வரர்
38. கல் நெஞ்சன்
39. அதிரடிப் படை (ஆண்டு மலர் III)
40. பயங்கர நாடகம்
41. கராத்தே டாக்டர்
42. லயன் சூப்பர் ஸ்பெஷல் (தீபாவளி மலர்)
43. கடத்தல் வலை
44. டேஞ்சர் டயபாலிக்
45. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
46. இராட்சஸக் குள்ளன்
47. மரணப் பணி
48. சூப்பர் ஸ்டார் ஸ்பைடர்
49. கொலைப் பசி
50. டிராகன் நகரம்
51. மிஸ்டர் ஜெட்
52. கானகத்தில் கண்ணாமூச்சி
53. சாகஸத் தலைவி!
54. கற்கால வேட்டை
55. சிறுபிள்ளை விளையாட்டு
56. இரத்த முத்திரை
57. அதிரடி ஆர்ச்சி
58. வாரிசு வேட்டை
59. மிஸ்டர் மர்மம்
60. வைகிங் தீவு மர்மம்
61. மந்திர ராணி
62. நடுக்கடலில் அடிமைகள்
63. மரண ராகம்
64. ஆபத்தைத் தேடி
65. தங்க நகரம்
66. மரீமக் கோவில்
67. எமனுக்கு எமன்
68. திக்குத் தெரியாத தீவில்
69. புதையலைத் தேடி
70. எமனோடு ஒரு யுத்தம்
71. கானகத்தில் ஒரு கைதி
72. மீண்டும் ஸ்பைடர்!
73. சிலந்தி வலையில் காரிகன்
74. மரணத்தின் நிறம் பச்சை
75. மரணத்தின் நிழலில்...!
76. அதிசயத் தீவில் ஆர்ச்சி
77. மர்ம முகமூடி
78. பொக்கிஷம் தேடிய பிசாசு
79. Operation அலாவுதீன்
80. ஒரு பனிமலைப் பயங்கரம்
81. பழி வாங்கும் புயல்
82. மரண மாளிகை
83. பாட்டில் பூதம்

84. மின்னலோடு ஒரு மோதல்
85. இரத்தமில்லா யுத்தம்
86. கழுகு வேட்டை
87. ஆர்ச்சி in பாரிஸ்
88. பாலைவன சொர்க்கம்
89. ஏரியில் ஒரு எரிமலை
90. இரத்த வெறியர்கள்
91. கானகக் கோட்டை
92. ராக்கெட் ரகசியம்
93. பலிகேட்ட புதையல்
94. எதிரிக்கு எதிரி
95. முகமில்லா மாயாவி
96. வேங்கை வேட்டை
97. பிணம் காத்த புதையல்
98. 'லயன்' ஸ்பெஷல்
99. பழிவாங்கும் பொம்மை
100. லயன் 'சென்சுவரி' ஸ்பெஷல்
101. ஒரு திகில் பயணம்
102. மந்திர மண்ணில் மாடஸ்டி
103. நடுக்கடல் நரகம்
104. ஜெஸ்லி ஜேம்ஸ்
105. மரண மண்டலம்
106. பச்சை வனப் பாவை
107. பிரின்ஸ் in ஆப்பிரிக்கா
108. எத்தனுக்கு எத்தன்
109. ஆர்ச்சியோடு மோதாதே
110. இரத்தப் படலம் - V
111. குற்றத் தொழிற்சாலை
112. லயன் Top 10 ஸ்பெஷல்
113. விபரீத விதவை
114. பூம் - பூம் படலம்
115. இரத்தக் கரம்
116. திகில் நகரம் டோக்கியோ
117. வெறி நாய் வேட்டை
118. மியாவ்... மியாவ்... மரணம்!
119. ஆவியின் பாதையில்
120. மரண முள்
121. மேடையில் ஒரு மன்மதன்
122. இரத்தப் படலம் - 6
123. கம்ப்யூட்டர் கொலைகள்
124. புலி வருது
125. மேகக் கோட்டை மர்மம்
126. நள்ளிரவு வேட்டை
127. பூமிக்கொரு ப்ளாக்மெயில்
128. ஒரு கோச் வண்டியின் கதை
129. ஹாலிவுட்டில் ஜாலி!
130. மரண நடை!



## மீண்டும் புக் - மார்கெட்!



வாசகர்கள் பங்கேற்கும் பல பகுதிகள் இதுவரை நமது லயனில் வந்துள்ளன. காணாமலும் போயுள்ளன! அந்த வரிசையில் 'புக் - மார்கெட்' பகுதியையும் சேர்க்கலாம்! ஆனால் ஏராளமான வாசக நண்பர்களின் வற்புறுத்தலுக்கு ஏற்ப - "புக் மார்கெட்" பகுதி re-entry ஆகப் போகிறது - but with a difference!

"கைவசம் நிறைய பழைய காமிக்ஸ் பிரதிகள் உள்ளன என்று விளம்பரம் போடுகிறார்கள் - ஆனால் தபால் எழுதினால் பதில் அனுப்புவதில்லை! சில சமயங்கள் பணம் அனுப்பினால் புத்தகங்களும் வருவதில்லை" என்பது தான் "புக்-மார்கெட்" தொடர்பான புகார்! தபாலில் பிரதிகள் தொலைந்து போயிருக்கலாமே தவிர - நமது வாசகர்கள் 'தில்லு முல்லு' பண்ணிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு!

அயல்நாடுகளில் காமிக்ஸ் சேகரிப்பது என்பது ஒரு பெரிய hobby! கிடைப்பதற்கரிய பழைய பிரதிகளுக்கு ஏராளமான premium கொடுத்து வாங்கி சேகரிக்கும் நபர்கள் பலர்! "Comics Buyers Guide" என்று ஒரு மாத இதழே அமெரிக்காவில் வெளிவருகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! (யார் யாரிடம் எந்த வருஷத்து காமிக்ஸ்கள் உள்ளன; அவற்றிற்கு எவ்வளவு அதிக விலை கொடுத்து வாங்கலாம் என்பது பற்றிய guide இது!) காமிக்ஸ் trading என்பது புத்தகப் பரிமாற்றத்தோடு நின்று விடாமல் - பல நண்பர்களையும் உருவாக்கியுள்ளது!

இந்தப் பாணியை நாமும் பின்பற்றினால் 'புக் - மார்கெட்' புகார் மார்கெட்டாக மாறிட வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன்! So - கைவசம் உள்ள நமது முந்தைய பிரதிகளை விற்பனை செய்திட விரும்பும் நமது வாசகர்கள் - பிரதிகளின் list + விலை விபரத்தை வழக்கம் போல ஒரு post cardல் எழுதி நமக்கு அனுப்ப வேண்டியது. அத்தோடு பிரதிகளுக்கு நீங்கள் எதிர்பார்க்கும் premium எவ்வளவு என்பதையும் எழுதிட வேண்டும்.

விளம்பரத்தை வழக்கம் போல 'புக் - மார்கெட்'' பகுதியில் பிரசுரிப்போம்! ஒவ்வொரு விளம்பரத்திற்கும் ஒரு reference நம்பர் தரப்படும்!

வித்தியாசம் என்னவென்றால் - பிரதிகளை வாங்க நினைக்கும் வாசகர்கள் - அதற்கான பணத்தை மணி ஆர்டர் மூலம் நமது அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியது!

விற்பனை செய்திட நினைக்கும் வாசகர்களோடு தொடர்பு கொண்டு அந்தந்தப் பிரதிகளைப் பெற்று - முறையாக அனுப்பி வைப்பது எங்கள் பொறுப்பு!

So - காமிக்ஸ் வாங்க - விற்க இனி எங்க கிட்டே வாங்க!

அன்புடன்,
S. விஜயன்.

# "மாதம் ஒரு வாசகர்"



| | | |
|---|---|---|
| பெயர் | : | **L. பூபதி** வயது : 16 |
| முகவரி | : | No.8, ராவுத்தநாயக்கர் தெரு,<br>23-வது வார்டு<br>இராசிபுரம் - 637 408<br>நாமக்கல், இராஜாஜி மாவட்டம். |
| கல்வித் தகுதி | : | XI ம் வகுப்பு - (EMR) |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | 6 வருட காலமாய் |
| அறிமுகம் | : | நண்பர் முத்து (காமிக்சின்) மூலம் |
| படிக்கும் இதர இதழ்கள் | : | இராணி காமிக்ஸ், முத்து காமிக்ஸ், ஆனந்த விகடன். |
| படித்து ரசித்த கதைகள் | : | பாலைவனப் பரலோகம், மரண மண்டலம், திகில் நகரம் டோக்யோ, விபரீத விதவை... etc. |
| பிடித்த ஹீரோக்கள் | : | ஸ்பைடர், ஆர்ச்சி, டெக்ஸ் வில்லர், மாடஸ்டி. |
| பிடித்த பகுதிகள் | : | ஹாட்லைன், வாசகர் ஸ்பாட்லைட், க்ரைம்க்விஸ்... etc. |
| என்னைத் தவிர வீட்டில் படிப்பவர்கள் | : | நண்பர் V. சந்திரசேகரன், D. முருகேசன். |

## '97 லயன் கோடை மலர்

**முன்பதிவு கூப்பன்**

தேதி : ______________

| | | |
|---|---|---|
| பெயர் | : | ______________ |
| முகவரி | : | ______________ |
| | | ______________ |
| | | ______________ |
| ஊர் | : | ______________ |
| அஞ்சல் எண் | : | ______________ |
| தேவையான பிரதி | : | ______________ |
| முன்பணம் அனுப்பிய விபரம் | : | ______________ |
| பதிவுத் தபால் / சாதா தபால் | : | ______________ |

| |
|---|
| பதிவுத் தபாலில் பெற விரும்பினால் ரூ. 32/- M.O. அனுப்பவும். |
| சாதா தபாலில் பெற விரும்பினால் ரூ. 26/- M.O. அனுப்பவும். |
| தபாலில் தவறும் பிரதிகளுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. |

*M.O. அனுப்ப வேண்டிய முகவரி:*

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
*த.பெ. எண் : 374,*
*சிவகாசி - 626 123.*

## வாசகர் கடிதம்





**மு. ஹ. மொய்தீன்,** சென்னை-14.

அதுசரி! ஹீரோ யாரு ஜாக்கி ஸ்டாரா? அல்லது சீஃப் ஹார்ஸஸ் நெக்கா? கண்ணைக் கவரும் கலர்ஃபுல்லான அட்டைப்படம் சூப்பர்!

**T. சரவணக்குமார்,** திருப்பூர்.

ஹாலிவுட்டில் ஜாலி தூள். அட்டைப்படம் அருமை. வண்ணம் சூப்பர். ஜாக்கி சூப்பர் கதாநாயகன்.

**பா. சுந்தர பாண்டியன்,** பேரையூர்.

ஆக்சனுக்கு டெக்ஸ் வில்லரும், நடைமுறைக்கு மாடஸ்டி & கார்ஷனும், புன்னகைக்கு லக்கிலூக்கும், சிரிப்புக்கு ஜாக்கி ஸ்டாரும் ஆவார்கள்.

**A. RAMAMOORTHY,** METTURDAM.

'ஹாலிவுட்டில் ஜாலி' எதிர்பாராத Surprise. (டெக்ஸை எதிர்பார்த்தோம். இருப்பினும் ஏமாற்றமில்லை.) 'ஜாக்கி'க்கு முக்கியத்துவம் இல்லையெனினும் கலகலப்புக்கு குறைவில்லை. இதைப் படிக்கும் போது ஹாலிவுட்டில் மட்டுமல்ல இங்கும் 'ஜாலி'தான்.

**M இராஜவேல்,** அருப்புக்கோட்டை.
**M இராஜ்குமார்.**

''ஹாலிவுட்டில் ஜாலி,'' படங்கள் சுமார்தான் என்றாலும் கதை செமசிரிப்பு. 'லயன் 1996 - ஒரு கண்ணோட்டம்' சூப்பர்.

# "மாதம் ஒரு முகவர்"



வயது : 32

| | | |
|---|---|---|
| பெயர் | : | P. BALASUBRAMANIAN, |
| முகவரி | : | Comic Writer & News Agent,<br>37-A, Alamaram St.<br>Karur - 1. |
| சொந்தமாக புத்தகக்கடை உள்ளதா அல்லது கடைகளில் விநியோகம் செய்வது மட்டும்தானா? | : | உள்ளது. |
| லயன்/முத்து காமிக்ஸ் விற்பனையாளராக இருப்பது எவ்வளவு காலமாய்? | : | பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஆரம்ப கால ஏஜண்டாக உள்ளேன். |
| இதர ஏஜென்சிகள் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு? | : | ஆனந்த விகடன், கல்கி, பாக்யா, ஜூனியர் விகடன், துக்ளக், ஜெமினி இன்னும் பல. |
| லயன்/முத்து காமிக்ஸ் இதழ்களின் நிறைகள் என்று நீங்கள் நினைப்பது என்ன? | : | வித்தியாசமான தரமான கதைகள், தத்ரூபமான படங்கள். |
| குறைகள் | : | இதழ் லேட்டாக வருவது.இவ்வளவு வருட காலங்களுக்கு பிறகும் கூட இவ்வளவு அருமையான ஓர் இதழை ராணிகாமிக் போல் Timeக்கு கொண்டு வர முடியாததை பெரும் குறையாக எண்ணுகிறேன்! ஒரு பெரிய அச்சக நிறுவன அதிபராக உள்ள தங்களால் இதை மட்டும் ஏன் சரி பண்ண முடியவில்லை என்பதுதான் எனக்கு புரியாத புதிராக உள்ளது! |
| விற்பனை: உயர்விற்கு என்ன பண்ணலாம்? | : | ராணிகாமிக் 1, 15க்கு சரியாக வருவது போல், நமது இதழ்களும் ஜனவரி - '96, பிப். '96 என உள்ளே மாதம்போட்டு 28 to 30 தேதிக்குள் முறையாக, சரியாக வரவேண்டும் என்பது எனது நீண்ட நாளைய கனவு! இது நிறைவேறுமா? இல்லை பழயபடிதான் தொடருமா? விடை தங்கள் கையில்! |


விரைவில் வருகிறது!
இரத்தப் படலம் (7)!
லயன் காமிக்ஸ்
தொடர்ந்திடும் ஒரு தேடல் காவியம்!



## வாசகர் ஹாட் - லைன்

நமது லயனின் 1996 performance பற்றிய கேள்விகளில் "புதிதாக என்ன செய்யலாம்?" என்று ஒரு கேள்வியும் கேட்டிருந்தோம். அதற்கு ஏராளமான suggestions! உங்களின் கருத்துக்களையும் - அதற்கான எனது reactionsம் இதோ :

- **Suggestion 1: "லயன் காமிக்ஸை மாதம் 2 முறையாக மாற்றுங்கள்!"**

"ஏராளமான லயன் ஹீரோக்கள் - போதிய வாய்ப்பு கிடைக்காத காரணத்தால் தூங்கிக் கொண்டுள்ளனர்! So - அவர்களுக்கு சான்ஸ் கொடுக்கவாவது மாதம் 2 முறையாக்குங்கள்!" - இது பெரும்பான்மையான வாசகர்களின் வேண்டுகோள்! ஆனால் - இதை நடைமுறைப்படுத்துவது அத்தனை சுலபமல்ல! முதலில் தயாரிப்புப் பணிகளை எங்கள் சைடில் துரிதப்படுத்திட போதிய ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். இரண்டாவதாக - விற்பனை சைடிலும் நிறைய கவனம் செலுத்த வேண்டும்! கேபிள் டி.வி.யின் அதிரடித் தாக்குதலில் - பத்திரிகையுலக ஜாம்பவான்களே ஆட்டம் கண்டு இன்று ஏகப்பட்ட gimmicks (தினமும் சவரன்; வைரம்; etc.. etc...) செய்ய வேண்டியுள்ள காலகட்டம் இது!

நம் போன்ற சிறு பத்திரிகைகள் எதைச் செய்தாலும் நிறையவே யோசித்து செய்தாக வேண்டும். So - இப்போதைக்கு லயனை மாதம் இருமுறையாக்குவது என்பது ஒரு long-term goal ஆக மட்டுமே நமக்கு இருக்க முடியும்!


- **Suggestion 2: "பழைய காமிக்ஸ் விற்க - வாங்க உதவுங்கள்"**

லயனின் சமீபத்திய வாசகர்கள் பலரின் குரல் இது! ஆரம்பத்திய வெளியீடுகளைப் படிக்க விரும்பி நமக்கு தினமும் வரும் கடிதங்கள் ஏராளம்! "கைவசம் பழைய பிரதிகள் Stock இல்லாவிட்டால் கூட - நீங்கள் வைத்திருக்கக் கூடிய press copy-களையாவது அனுப்புங்கள்" என்றெல்லாம் கூட தபால்கள்! இது போன்ற வாசகர்களுக்கு உதவிடும் நோக்கில் தான் "**மீண்டும் புக்-மார்கெட் பகுதியைத் துவக்குகிறோம்! பார்க்க பக்கம் 57!**

- **Suggestion 3: "இரத்தப் படலம் கதைகளைத் திரட்டி, மொத்தமாக ஒரே புக்காகப் போடுங்கள்"**

நிச்சயம் இதனை செய்திடத் தான் போகிறேன்! இரத்தப்படலம் 12 பாகங்களைக் கொண்டது! இந்த ஆண்டு பாகம் (7) & (8) வரும்! மீதமுள்ள பாகங்களையும் ஓரிரு ஆண்டுகளில் முடித்த பின்னர் - மொத்தமாக ஒரு ராட்சஸ சைஸ் volume ல் **இரத்தப்படலம்**வரும்!

- **Suggestion 4: "முன்பு போல நிறைய ஹீரோக்களை சேர்த்துப் போட்டு ஸ்பெஷல் வெளியிடுங்கள்!"**



தற்சமய ஸ்பெஷல் வெளியீடுகள் Tex Willer ன் monopoly ல் உள்ளது! முன்பு போல நிறைய ஹீரோக்களைப் போட்டு ஸ்பெஷல் வெளியிடலாம் தான்! ஆனால் - டெக்ஸ் வில்லருக்கு வாய்ப்பு கொடுக்க முடியாமற்போகுமே! டெக்ஸ் & Co-வின் கதைகளின் பெரும்பான்மை 200 பக்கங்களுக்கும் அதிகமானவையே! அவற்றை வெளியிடக் கிடைக்கும் ஒரே வாய்ப்பு ஸ்பெஷல் இதழ்களில் தான்! So - நிறைய ஹீரோ பார்முலாவைத் திரும்பவும் கொண்டு வந்தால் - நமது Top ஹீரோவிற்கு சான்ஸ் குறைந்துவிடும்!

- **Suggestion 5 : "லயன் Digest" கொண்டு வாருங்கள்!**

மும்பையிலிருந்து வரும் இண்டியா புக் ஹவுஸ் நிறுவனத்தாரின் (ஆங்கில) TINKLE சிறுவர்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றதொரு இதழ்! சின்னச்சின்ன சித்திரக்கதைகளை சேகரித்து ஒரே இதழாகப் போடுவார்கள்! சில வருடங்கள் போன பின்னர், அதே சிறுகதைகளைத் திரட்டி வேறு வடிவத்தில் புதிய அட்டைப்படத்துடன் TINKLE DIGEST என்று போடுகிறார்கள்! அதனை மனதில் கொண்டு நம் வாசகர்கள் எழுதிய கருத்து இது!

So - இது போல நாமும் வெளியிடுவதாக இருந்தால் **"ஸ்பைடர் டைஜஸ்ட்"; "ஆர்ச்சி டைஜஸ்ட்"; "இரும்புக்கை மாயாவி டைஜஸ்ட்"** என்று தலைப்பிட்டு - அந்தந்த ஹீரோவின் முந்தைய சாகஸங்களை தொகுப்பாக வெளியிடலாம்! இது நல்லதொரு ஐடியாவாகத் தான் படுகிறது எனக்கு! அடுத்த விடுமுறைகளின் போது இதனை நடைமுறைப்படுத்திப் பார்க்கலாம்!

- **Suggestion 6 : "மினி லயன்" or "திகில்" மீண்டும் வர ஏற்பாடு செய்யுங்கள்!**

**"மினி லயன்"** மூலம் கார்டூன் கதைகள் வருவதில்லை... என்று ஆதங்கப்படுவது அவசியமல்ல என்று நினைக்கிறேன்! ஏனென்றால் - **லக்கி லூக்; ஜாக்கி ஸ்டார் போன்ற கார்டூன் ஹீரோக்களுக்கு லயனில் regular ஆக சான்ஸ் கொடுத்து வருகிறோம். மினி லயனின் மற்றொரு அபிமான ஹீரோவான சிக் பில்** குழுவினரது சாகஸமும் இந்த ஆண்டு முதல் லயனில் தொடரும். (நிஜமாகவே!) So - கார்டூன் பிரியர்களின் ரசனைக்கு ஓரளவாவது cater செய்து வருகிறோம்.

ஆனால் **"திகில்"** கதைப் பிரியர்களுக்கு சமீப காலமாய் ஏதும் செய்திட இயலவில்லை என்பது நிஜமே! இந்தக் குறையை சிறிது நிவர்த்தி செய்திடுவதற்காக வரும் மே மாதம் - நமது முத்து காமிக்ஸில் ஒரு **"திகில் ஸ்பெஷல்"** வெளியிடவிருக்கிறோம். கறுப்புக் கிழவியின் கதைகள்; XIII ம் மாடி; போன்ற chillers ன் தொகுப்பாக வரவிருக்கிறது! இந்த இதழுக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்த்து விட்டு - அவ்வப்போது திகில் கதைகளை 'முத்து'வில் போடுவது பற்றி தீர்மானிக்கவிருக்கிறேன்! So - கேபிள் டி.வி.க்கள் போரடித்து மீண்டும் reading habit பிக்-அப் ஆகும் போதே புதிய பத்திரிகைகள் பற்றி நினைத்திடுவது சரியாகும்!

அன்புடன்,

**S. விஜயன்.**

# ஹலோ சூப்பர் மேன்!

## சர்வதேச காமிக்ஸ் சூப்பர் ஸ்டார்களின் கதை இது!

S. விஜயன்

**"கதை சொல்லும் படங்கள்"** (சென்ற ஆண்டு வரை லயனில் நான் எழுதி வந்த கட்டுரைத் தொடர்) மற்றும் சமீபத்திய **"சித்திரம் பேசுதடி"** (முத்து காமிக்ஸ்) தொடர்களுக்கு நீங்கள் கொடுத்திட்ட வரவேற்பினை மனதில் கொண்டு இந்தப் புதிய கட்டுரைத் தொடரை தொடங்குகிறேன். 'பிளேடு' மாதிரித் தோன்றினால் - 'சட்'டென சுட்டிக் காட்டுங்கள்!

இந்தத் தொடருக்கு **"ஹலோ சூப்பர் மேன்"** என்று பெயர் வைத்தது எதற்காக என்று நீங்கள் யோசிக்கலாம்! 18ம் நூற்றாண்டின் துவக்கத்தில் தலைதூக்கிய சித்திரங்களால் கதை சொல்லும் காமிக்ஸ் கலை சாதுவாய் பல்லாண்டுகளைக் கழித்திட்டது! ஆனால் - 1938ல் அமெரிக்காவின் ஒரு மூலையில் **"ஆக்ஷன் காமிக்ஸ்"** என்ற தலைப்பில் வந்ததொரு இதழ் -காமிக்ஸ் உலகின் தலைவிதியையே அதிரடியாய் மாற்றி எழுதியது!

Yes - "சூப்பர் மேன்" எனும் புதியதொரு ஹீரோவின் அறிமுகம் காமிக்ஸ் உலகையே தலைகீழாய் மாற்றியது!

அது நாள் வரை - நியூஸ் பேப்பர்களில் ஒரு மூலையை அலங்கரிப்பதே பிரதான நோக்கமாய் கொண்ட சின்னஞ்சிறு கார்ட்டூன் strip-கள் மட்டுமே வெற்றியடைந்து கொண்டிருந்தன! மற்றபடிக்கு காமிக்ஸ் இதழ்கள் வந்த வேகத்திலேயே காணாமலும் போய்க் கொண்டிருந்தன!







**மிக்கி மவுஸ்"** மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருந்து வந்தபோதிலும் - சூப்பர் மேன் ஏற்படுத்திய impact அலாதியானது!

விண்ணில் பறந்து - வியத்தகு சாதனைகளை செய்திட்ட சூப்பர் மேன் ஏகப்பட்ட நிராகரிப்புகளுக்குப் பிறகு **"ஆக்ஷன் காமிக்ஸ்" எனும் இதழில் ஜனித்தார்! ஜூன் 1938ல் வந்திட்ட** அந்த historic இதழின் இன்றைய மார்கெட் விலை என்ன தெரியுமா? நம்பினால் நம்புங்கள் - 14,000 அமெரிக்க டாலர்கள்! (சுமார் ஐந்து லட்சம் ரூபாய்கள்)

So - காமிக்ஸ் ஹீரோக்களில் ஒரு landmark ஆக அமைந்திட்ட **"சூப்பர் மேனைத்"** தொடர்ந்து வந்து வெற்றி பெற்ற மற்ற ஹீரோ; ஹீரோயின்களை அடையாளம் காணும் முயற்சியே இந்தக் கட்டுரைத் தொடர்!

**- வளரும் -**


மே '97ல் வருகிறது!
கோடை மலர்!
லயன் காமிக்ஸ்
டெக்ஸ் வில்லர் சாகஸம்!
கார்ஸனின் கடந்த காலம்!
288 பக்க முழு நீ...ள... த்ரில்லர்!
ப்ளஸ்
ஒரு 'சஸ்பென்ஸ்' இலவச இணைப்பு!


முத்து காமிக்ஸ்
இதழ் நிர்: 250
ஏப்ரல் '97ல்
வருகிறது!
பதிவு செய்திட மறவாதீர்கள்!